முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 162/2018

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி. . 1

பெயர் . . கமலகண்ணன்

தகப்பனார் / கணவர் பெயர் . .

தொழில் . .

கிராமம் . .

தாலுக்கா . .

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். வாகன காப்பீட்டு சான்று எ.சா.ஆ.1. அனக்காவூர் காவல் நிலைய குற்ற எண். 275/2018 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கை எ.சா.ஆ.2.

**குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்படுத்திய டிராக்டர் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் நிபந்தனைக்குட்பட்டு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. டிராக்டரை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. முதல் தகவல் அறிக்கையில் டிராக்டரின் வலதுபுற சக்கரம் ஏறி இடுப்பு எலும்பு உடைந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு, டிராக்டரிலிருந்து கீழே விழுந்து அதன்

பிறகு வலதுபுற சக்கரம் ஏறி இடுப்பு எலும்பு உடைந்ததாக சொல்லப்பட்டுள்ளது. டிராக்டர் சக்கரம் ஏறியதால் தான் மனுதாரர் இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. புலனாய்வு அலுவலர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. டிராக்டரின் வலதுபுற சக்கரம் ஏறி மனுதாரருக்கு இடுப்பு எலும்பு உடைந்து விட்டதால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் தவறு. மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் தான் சட்டப்படி இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.